மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30ஆம் நாள் புதன் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திரு.கே.ஐங்கரன், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 508/2018 பி.வா.சா.1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. பாண்டுரங்கன் | வயது | .. 80 |
| த/பெ. | .. மொட்டைய கவுண்டர் | சாதி | .. |
| கிராமம் | .. மண்டகொளத்தூர் | சமயம் | .. |
| தாலுக்கா | .. போளூர் | தொழில் | .. விவசாயம் |

30.3.2022 - பி.வா.சா.1 முதல் விசாரணை.

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி. நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் படிக்கக்க கேட்டேன். நான் சொன்னபடி இருந்தது. அதன் பிறகு அதில் கையெழுத்திட்டேன். 18.07.2000 தேதியிட்ட பாண்டுரங்கத்திற்கு ஒரு கிருஷ்ணமூர்த்தி எழுதிக் கொடுத்த அசல் கிரையப் பத்திரம் பி.வா.சா.ஆ.1. 29.11.1995 தேதியிட்ட கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு கண்ணன் மந்திரி வகையறாக்கள் எழுதிக்கொடுத்த பதிவு கிரையப்பத்திரம் பி.வா.சா.ஆ.2. 27.04.1995 தேதியிட்ட கிருஷ்ணமூர்த்திக்கு ஏழுமலை வகையறாக்கள் எழுதிக்கொடுத்த பதிவு கிரையப்பத்திர சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3. 22.09.2003ல் பாண்டுரங்கன் பெயரிலான பட்டா எண்.831 புவத்திப்பட்டா புத்தகம் பி.வா.சா.ஆ.4. 19.08.2021ல் பிரதிவாதி பாண்டுரங்கன் பெயரிலான கணிணி சிட்டா நகல் பி.வா.சா.ஆ.5. மின் இணைப்பு எஸ்.சி.நெ.84க்கு உண்டான 1ஆம் பிரதிவாதி பாண்டுரங்கனுக்கு கிரையம் கொடுத்த கிருஷ்ணமூர்த்தி பெயரிலான மின் இணைப்பு அட்டை

பி.வா.சா.ஆ.6. செப்டம்பர் 2003ல் பிரதிவாதி பாண்டுரங்கத்திற்கு கிரையம் கொடுத்த கிருஷ்ணமூர்த்தி பெயரிலான மின் கட்டண ரசீது பி.வா.சா.ஆ.7. 01.12.2021 மின் இணைப்பு பெற்ற ஏழுமலை பெயரில் மண்டகொளத்தூர் ஜீனியர் என்ஜினியர் அவர்களால் 1ஆம் பிரதிவாதி பாண்டுரங்கத்திற்கு வழங்கப்பட்ட டெஸ்ட் ரிப்போர்ட் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.8. 22.12.2010ல் லேட். கிஷ்ட மந்திரி அவர்களின் இறப்பு சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.9. 02.12.2021ல் மண்டகொளத்தூர் ஜீனியர் என்ஜினியர் அவர்களால் வழங்கப்பட்ட பிரதிவாதி பாண்டுரங்கன் பெயரிலான கன்ஸ்யூமர் லெட்ஜர் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.10. மேற்கண்ட பி.வா.சா.ஆ.1 முதல் 10 வரையிலான ஆவணங்கள் வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி தரப்பில் மேலும் சில ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.